(முற்பகல் 9-40)

2. அறிவிப்பு.

மேலவையிலிருந்து வரபபெற்ற செய்தி—சட்ட முன்வடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. 1984 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல், தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1983).

2. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1984.)

மேலும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 11/1984) ஆய்வு செய்யப் பெற்று, பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப் பப் பெற்றதாகவும் மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிட மிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

3. அரசினர் சட்ட முன்வடிவு.

மருந்துப் பொருட்கள் ஏனைய பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள் ஏனைய பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு, அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.